

# Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் ஜெபத்தினால் சர்வ வல்ல தேவன் செய்த அற்புதங்கள்

## ஆபத்தான நிலையை கடந்து பரிபூரண சுகத்தை பெறும்படியாக தயை செய்த தேவன்



எனது கணவருக்கு திடீரென்று நெஞ்சு வலி ஏற்பட்டு வியர்வை மிக அதிகமாக சரீரம் முழுவதும் வெளியேறிக் கொண்டே இருந்தது. உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மருத்துவர்கள் எனது கணவரை பிழைக்க வைக்க முயற்சி செய்தாலும், எங்களுக்குள் ஒரு பயம் இருந்து கொண்டே இருந்தது. இந்நிலையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களுக்கு வாட்ஸ்அப் மூலம் கணவரின் நிலையை கண்ணீரோடு கூறினேன். சகோதரர் கனிவுடன் விசாரித்து பரிசுத்த ஆவியின் வல்லமையோடு ஜெபித்து **சுமார் 10 வாக்குத்தத்த வசனங்களை கூறியதுடன் "இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த இரத்தம் உங்கள் கணவரை பாதுகாக்கும், அதிசயத்தை காண்பீர்கள், பயப்படாதீர்கள்!" என்று கூறினார்கள். அவர்கள் செய்த ஜெபமும், சொன்ன வாக்குத்தத்தமும் எனக்கு மிகுந்த ஆறுதலை தந்தது.** நானும் அந்த 10 வசனங்களையும் சொல்லி சொல்லி ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தை கேட்டார், **கணவரின் உடல் நிலையில் முன்னேற்றம் உண்டானது. அவர் பரிபூரண சுகமாகி ஒருசில நாளில் மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார்கள். மருத்துவ கட்டணமும் சந்திக்கப்பட கர்த்தர் கிருபை செய்தார்.** எங்களுக்காக ஜெபித்த சகோதரருக்கு நன்றி! அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகின்றேன்.

**- Mrs. Bridget Rozario, Malaysia**

## 11 ஆண்டுகளுக்கு பிறகு குழந்தை பாக்கியம் அருளின அற்புதர்!

எனக்கு திருமணமாகி 11 ஆண்டுகளாகியும் குழந்தை பாக்கியம் இல்லாமல் கண்ணீரோடு நாட்களை கழித்து வந்தேன். சமுதாயத்தில் எங்களை மிகவும் ஏளனமாக பேச ஆரம்பித்தார்கள். எங்கள் வாழ்நாளில் இனி குழந்தை பாக்கியம் என்பது கிடையாது என்ற நிலைதான் என்பதை நினைக்கும்பொழுது திகைத்து, கலங்கி போய் காணப்பட்டோம். இந்நிலையில் திருச்சி ஜெப ஸ்தலத்திற்கு வந்து **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களை சந்தித்து எங்கள் நிலையை கூறி ஜெபிக்கக் கேட்டோம். அவர்கள் எங்களுக்காக ஊக்கத்தோடு **"இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம் கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்"** இந்த வேத வார்த்தைகளின்படி கர்ப்பத்தின் கனியை தருகிற தேவன் தாமே உங்களுக்கு குழந்தை செல்வத்தை நிச்சயம் அருளுவார் என ஜெபித்தார்கள். அதின்படியே சர்வவல்ல தேவன் எங்களுக்கு இரங்கினார். **2013ஆம் ஆண்டு இஷாந்த் ஆரியா என்ற ஒரு மகனும், 2016ஆம் ஜீத்தேஸ் ஆரியன் என்கிற மகனும் பிறந்துள்ளனர்.** எங்கள் கண்ணீரை களிப்பாக்கிய தேவனுக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஸ்தோத்திரம் செலுத்துகின்றோம்.

**- திருமதி. கண்ணகி, நாமக்கல் மாவட்டம்**



# 14.03.2020ல் ஈரோட்டில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் Rev.Dr.A. ஜாஷ்வா அவர்களது ஜெபத்தின் மூலம் அற்புதங்களை பெற்றவர்கள் கூறும் சாட்சிகள் உங்கள் பார்வைக்காக...

## ஊழிய அழைப்பை உறுதிபடுத்தின கர்த்தர்



ஊழிய அழைப்பு எனக்கு இருந்தது, ஆனால் ஊழியம் செய்வதற்கு தொடர்ந்து தடைகள் ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. இதனால் நான் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளானேன். இந்நிலையில் ஈரோட்டில் உள்ள பிரப் ஹாலில் நடைபெறும் குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தை குறித்து அறிந்து அதில் கலந்துகொள்ள வேண்டுமென்றும், கர்த்தர் இந்த நாளில் ஊழியக்காரர் மூலம் எனது ஊழிய அழைப்பை உறுதி செய்ய வேண்டுமென்று ஜெபித்துவிட்டு வந்தேன். ஜெப வேளையில் **Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் என்னை குறிப்பிட்டு அழைத்து "கர்த்தர் உன்னை ஊழியத்திற்கு அழைத்திருக்கிறார், தடைகளை நீக்குவார் கலங்காதே"** என்று கூறினார்கள். **நான் ஜெபித்தபடியே கர்த்தர் போதகர் மூலம் ஊழிய அழைப்பை உறுதி செய்தது எனக்கு அதிக மகிழ்ச்சியை தருகிறது.** இருதயங்களை ஆராய்ந்து அறிகிற தேவன் எனது அழைப்பை உறுதி செய்தார். மேலும் அவர் தம்முடைய அபிஷேகித்தினால் அளவில்லாமல் என்னை நிரப்பினார். அவருக்கே மகிமையுண்டாவதாக.

**- Sis. மணிமேகலை, ஈரோடு**

## கழுத்து மற்றும் தாடை வலியிலிருந்து அற்புத சுகம்



கழுத்து மற்றும் தாடை வலியுடன் ஈரோடு குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்துகொண்டேன். **என்னால் தாங்க முடியாத அளவிற்கு வலி இருந்தது. கழுத்தை திருப்ப முடியாமலும் கஷ்டப்பட்டேன்.** ஜெப வேளையில் **Rev.Dr.A.ஜாஷ்வா** அவர்கள் **வியாதியுள்ளவர் களுக்காக ஜெபித்த பொழுது தேவ வல்லமை என் மீது இறங்கியது. அந்த நேரமே எனக்கிருந்த வலி மறைந்து சுகம் பெற்றேன்.** இப்பொழுது எனது கழுத்தையும் திருப்ப முடிகின்றது. சுகம் தந்த தேவனை துதிக்கின்றேன்.

**- Sis. பிரேமலதா, ஈரோடு**

## ஆபத்தான நிலையிலிருந்தவருக்கு அற்புத சுகம் தந்த தேவன்!



**சமாதானமில்லாமல் கூட்டத்திற்கு வந்த எனக்கு தேவன் மிகுந்த சமாதானத்தைத் தந்தார். மேலும் எனக்கு தெரிந்த ஒருவருக்கு விபத்து ஏற்பட்டு கண்களில் அடிபட்டு இரத்தக் கசிவு ஏற்பட்டது. இதனால் அவர்கள் மிகவும் பயந்தார்கள். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது,** என்றாலும் இரத்தம் வருவது நிற்கவில்லை. இந்நிலையில் என்னிடம் இதுகுறித்து தொலைப்பேசியில் கூறினார்கள். உடனடியாக நான் **அன்பரின் ஊழிய ஜெப மையத்தை தொடர்பு கொண்டு நிலைமையை கூறி ஜெபித்துக் கொண்டேன். ஜெபத்திற்கு பிறகு சுமார் ஒரு மணி நேரம் கழித்து அவர்களை தொலைப்பேசியில் தொடர்புகொண்டு கேட்ட பொழுது இரத்தம் வடிவது நின்றுவிட்டது** என்றார்கள். அதுமாத்திரமல்ல மறுநாள் பூரண சுகமாகி மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டதையும் இரண்டு நாட்கள் கழித்து என்னிடம் தெரிவித்தார்கள். அற்புத சுகம் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

**- Sis. பிரபா, ஈரோடு**

## எனது கணவருக்கு நல்ல வேலை கிடைத்தது!

என்னுடைய கணவருக்கு வேலை கிடைக்காமல் மிகுந்த கஷ்டங்கள் மத்தியில் நாங்கள் வாழ்ந்துக் கொண்டிருந்தோம். அப்.படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் அன்பரின் ஊழியம் பத்திரிக்கை ஒன்று எனக்கு கிடைத்தது. அதில் **RevDr.A. ஜாஷ்வா அவர்கள் எழுதியவாக்குத்தத்தச் செய்தியை படித்து, நம்பிக்கையோடு என் கணவருக்காக ஜெபித்தேன். கர்த்தர் என் நம்பிக்கையின் ஜெபத்தைக் கேட்டு, என் கணவருக்கு நல்ல வேலையைகொடுத்தார்.** தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**- திருமதி. ஜீவா, கவுண்டம்பள்ளி, ஈரோடு**

# அன்பரின் ஊழியம்

மலர் : 7 ♦ செப்டம்பர் 2021 ♦ இதழ் : 9




## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே!

மிகுந்த உருக்கமும், இரக்கமும் அன்புமுள்ள தேவாதி தேவனுடைய பரிசுத்த நாமத்தில் உங்கள் அனைவருக்கும் என் இதயப்பூர்வமான வாழ்த்துக்களை அன்பரின் ஊழியத்தின் சார்பில் தெரிவிக்கின்றேன்.

**கர்த்தர் தம்முடைய ஜனத்தை நெகிழவிடாமலும், தம்முடைய சுதந்தரத்தைக் கைவிடாமலும் இருப்பார்.**

**கர்த்தர் எனக்குத் துணையாயிராவிட்டால், என் ஆத்துமா சீக்கிரமாய் மவுனத்தில் வாசம் பண்ணியிருக்கும்.**

**என் கால் சறுக்குகிறது என்று நான் சொல்லும்போது, கர்த்தாவே, உமது கிருபை என்னைத் தாங்குகிறது. என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில், உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது.**

**கர்த்தரோ எனக்கு அடைக்கலமும், என் தேவன் நான் நம்பியிருக்கிற கன்மலையுமாயிருக்கிறார். - சங்கீதம் 94 : 14,18,19, 22**

இந்த கஷ்டமான காலங்களில் எப்பக்கமும் பயம் நம்மை சூழ்ந்திருக்கிறபொழுது மேற்கூறிய வேதத்தில் கூறப்பட்டுள்ள என்றும் அழியாத வசனங்கள் உங்களுக்கு மிகுந்த ஆறுதலை தரும் என்று நம்புகிறேன். உலகத்தில் இக்காலத்தில் நடக்கும் காரியங்கள் தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு ஒருவித பயத்தையும், திகிலையும் உண்டு பண்ணுவதை நாம் பார்க்கிறோம். தனிப்பட்ட மனிதனுடைய வாழ்க்கையிலும் சரி, குடும்ப வாழ்க்கையிலும் சரி, சமுதாய வாழ்க்கையிலும் சரி, பலநாடுகளின் விஷயத்திலும் சரி, வரவர உலகம் தன்னுடைய சமாதானத்தை இழந்து தவிக்கிறது. நமது அன்பரின் ஊழியப் பத்திரிக்கையை வாசிக்கும் அன்பர்களாகிய நீங்கள் இப்படிப்பட்ட கஷ்டமான சூழ்நிலைகளை கடந்து செல்லலாம். ஒரு பக்கம் கொள்ளைநோய்கள், இயற்கை சேதங்கள், வேலையில்லா திண்டாட்டங்கள், குடும்பத்தில் பல்வேறு பிரச்சனைகள், கடன் பாரங்கள், வரவேண்டிய ஆசீர்வாதம் தாமதித்தல், ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு மந்தநிலை, சோர்வுகள் இவை அனைத்தும் உங்களை மாறிமாறி வேதனைப்படுத்தி கொண்டிருக்கலாம். இருப்பினும், மனங்கலங்காதீர்கள்! கர்த்தர் உங்களுக்கு நித்திய அடைக்கலமாய் இருப்பார். அவர் தான் நம்பிக்கையின் கன்மலை. தாவீது தன் சிறுவயதில் ஆடுகளையே மேய்த்து வந்தவன். அபிஷேகம் பெற்ற பிறகு தன் காலத்தில் அநேக இக்கட்டுகளை கடந்து வந்தான். ஆனால் முடிவில் அவன் சங்கீதம் 18ம் அதிகாரத்தின் ஆரம்பத்தில் **கர்த்தர் தம்மை எல்லா சத்துருவின்**


ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |



அவசர ஜெப உதவிக்குத் தொலைபேசி எண்கள்: **(0431) 2765386, 2765952, 2760603, 2760604, 2760605** (24 மணி நேரமும்)

**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205

e-mail: **info@mojindia.org** website: **www.ministryofjesus.in**

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

**கைக்கும் நீங்கலாக்கி விடுவித்தார்** என்று சந்தோஷமாக சொல்கிறான். ஏனென்றால், **"உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார்"** என்று **சங்கீதம் 22:24ல்** கூறுகிறான்.

ஆம் அன்பானவர்களே! இக்காலத்தில் நம்முடைய ஜெபத்தை அதிகரிப்போம். உலகம் போகிற போக்கை பார்க்கும் பொழுது இயேசுவின் வருகை மகா சமீபம் என்று நாம் அறிந்து, அவருடைய வருகையை எதிர் நோக்குகிறவர்களாக, நம்மை நாமே ஆயத்தமுள்ளவர்களாக ஆயத்தப்படுத்துவோம். **நம்முடைய பிள்ளைகளும் ஜாக்கிரதையாக கிறிஸ்துவுக்குள் முன்னேறும்படி இடைவிடா ஜெபத்தாலும், நல்ல வேத அறிவுரைகளாலும் அவர்களையும் ஆயத்தப்படுத்துவோமாக! வேதப் புத்தகத்தில் கடைசி காலத்தை பற்றி எழுதிய அனைத்து தீர்க்கதரிசனங்களும் நிறைவேறி முடிவடைய போவதை நாம் பார்க்கிறோம்.** எனவே சோர்ந்து போகாதீர்கள்! நிச்சயம் கர்த்தர் உங்கள் கண்ணீரின் ஜெபத்தை கேட்டு உங்கள் வாழ்க்கையை எல்லாவிதத்திலும் சமாதானமுள்ளவைகளாக்கி, எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்.

கடந்த மாதத்திலும் கூட சில பங்காளர்கள் எங்களை நேரடியாக சந்தித்து ஜெபித்து சென்றார்கள். அநேகர் தொலைப்பேசி, வாட்ஸ்அப் மூலமாக எங்களை தொடர்பு கொண்டார்கள். அவர்களது பிரச்சனைகளுக்காக ஜெபித்தோம். கர்த்தர் அநேகருக்கு அற்புதங்களை செய்தார். அதை நீங்கள் இப்பத்திரிக்கையின் உள்ளே வாசிக்கலாம். உங்களில் அநேகர் எங்களது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்ப்பதற்காக தேவனை துதிக்கிறோம். கர்த்தர் தாமே இன்னும் என்னையும், என் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் அதிக வல்லமையாய் பயன்படுத்த ஜெபியுங்கள்.

கர்த்தர் நம்முடைய ஊழியத்தின் மூலமாக அநேக மக்களை ஆசீர்வதித்து வருகிறார். அதற்காக தேவனைத் துதிக்கிறோம். நாம் செய்கின்ற அறக்கட்டளை பணிகளுக்காக ஜெபியுங்கள். பிள்ளைகளுக்கு மீண்டும் ஆன்லைன் வகுப்புகள் ஆரம்பித்து விட்டபடியால் அநேக ஏழை பிள்ளைகள் அதை விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். நாம் நடத்திவரும் ட்யூசன் சென்டர் பிள்ளைகளுக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கிறது. அநேக பெற்றோர்களும், பிள்ளைகளின் உறவினர்களும் நாம் செய்கிற நல்ல காரியத்தை பார்த்து ஆச்சரியப்பட்டு இந்த அன்பின் அறப்பணியை தொடர்ந்து செய்யும்படி கெஞ்சி கேட்கிறார்கள். அவர்களுடைய நல்ல எண்ணங்களுக்காக தேவனை துதிப்போம்.

நம்முடைய ஸ்டூடியோவில் அநேக பொருட்கள் மிகப் பழமையாகிவிட்டது. அதில் புதுப்புது கருவிகள் வாங்கவேண்டி உள்ளது அதற்காகவும், அதின் வளர்ச்சிக்காக நமது ஜெப ஸ்தல பராமரிப்பு வேலைகள் சீக்கிரத்தில் ஆரம்பிக்க இருக்கிறோம். தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

இன்னும் ஊழியத்திற்கு தேவையான, கர்த்தருக்கு என ஒப்புக்கொடுத்த பிள்ளைகள் ஊழியம் செய்ய வரவும் அநேகர் தங்களை முழுநேர ஊழியங்களுக்காக அர்ப்பணிக்கவும் ஜெபியுங்கள். உங்களை சுமார் ஒன்றரை வருடம் தனிப்பட்ட முறையில் சந்திக்காமல் இருப்பது எங்களுக்கு மிகுந்த வேதனையை தருகிறது. எனவே சீக்கிரத்தில் அந்த காரியங்களை கர்த்தர் வாய்க்கப் பண்ணுவார், நீங்களும் எதிர்பாருங்கள் அதற்காக ஜெபியுங்கள்.

அதோடு உலகமெங்கும் பாடுபடும் நம்முடைய கிறிஸ்தவ நண்பர்களுக்காக அதிகமாய் ஜெபியுங்கள். ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தினால் அங்கு வசிக்கிற ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களை கொலை செய்வதில் தீவிரமாய் இருப்பதாக பல ஊடகங்கள் வாயிலாக கேள்விப்படுகிறோம். கர்த்தர் தாமே அவர்களை பாதுகாக்கவும், ஆவிக்குரிய பெலனை தரவும் ஜெபிப்போம். **சங்கீதம் 17:8**ன்படி கண்மணியை போல கர்த்தர் அவர்களை காப்பாற்ற ஜெபிப்போம்.

நமது தமிழ்நாட்டிற்காகவும், விசேஷமாக பள்ளிகள், கல்லூரிகள் திறக்கும் விஷயத்தில் மாணவர்களுக்கு எந்த பாதிப்பும் வராமல் கர்த்தர் பாதுகாக்க ஜெபிப்போம். உங்கள் குடும்பத்திலுள்ளவர்களோ அல்லது உறவினர்களின் குடும்பத்தினரோ வெளிநாடுகளில் வேலை செய்தால் அவர்களை கர்த்தர் பத்திரமாய் பாதுகாக்க ஜெபிப்போம். விசேஷமாக வேலை இழந்து தவிக்கிற உங்கள் பிள்ளைகள் மற்றும் பேரப் பிள்ளைகளுக்காக அதிகமாக ஜெபிக்கிறோம். நிச்சயமாய் கர்த்தர் உங்கள் விருப்பத்தை கேட்டு, பெரிய அற்புதத்தை உங்களுக்கு செய்வார் என்பதில் சந்தேகமே இல்லை.

அற்புத ஆராதனை சமூக ஊடகங்களில் ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்றது. அநேக மக்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கிறது. அதற்காக தேவனை துதிக்கிறோம். தொடர்ந்து இந்நிகழ்ச்சிகள் நடைபெற ஜெபியுங்கள். நீங்களும் Youtube& Facebook-ல் பாருங்கள்.

எங்களை தனியே சந்தித்து ஜெபிக்க விரும்புகிறவர்கள் முன் அனுமதி பெற்று வாருங்கள். **(94888 45627 & 0431-2765386)** திங்கள் முதல் சனிக்கிழமை வரை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை திருச்சியிலுள்ள ஜெப ஸ்தலத்திற்கு வந்து நீங்கள் ஜெபித்து செல்லலாம்.

இந்த ஊழியத்தை ஜெபத்தினாலும், காணிக்கையினாலும் தாங்குகின்ற உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றோம். கர்த்தர் தாமே நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரம் மடங்கு அதிகமாகும்படி ஆசீர்வதிப்பாராக. உங்களுக்காக தொடர்ந்து எங்கள் ஜெபங்களில் ஜெபிக்கிறோம். **(சங்கீதம் 146: 7-10 & 145: 18-21)**

## இம்மாத வாக்குத்தத்தம்

ஏசாயா 60:21
எபேசியர் 1:15-19
தானியேல் 4:37
1நாளாகமம் 17:8

# இதயம் தொட்ட எண்ணம்

**Make prayer your life
and your life will become a miracle.**

**ஜெபத்தை உன் வாழ்க்கையாக்கு
உன் வாழ்க்கை ஓர் அற்புதமாகும்.**

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

**ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள்
கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்**

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. | Account No. | Account No. |
| 10848469699 | 10848559426 | 10848474869 |

**State Bank of India, Cantonment, Trichy Main Branch
IFS Code : SBIN 0000930**

மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 95004 87061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code – ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 95004 87061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.



# உபத்திரவம் நல்லது

தேவசெய்தி: Dr. ஜேன் ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பரின் ஊழிய பத்திரிக்கை வாசகர்களே!

அன்பின் தேவன் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

2021ஆம் ஆண்டில் எட்டு மாதங்களை கடந்து ஒன்பதாவது மாதம் வரை நம்மை நடத்தின தேவனை துதிப்போம். நம்மைச் சுற்றி இந்நாட்களில் அநேகர், குறிப்பாக தேவனுடைய பணியை செய்கின்ற ஊழியர்கள் பாடுகளை, உபத்திரவங்களை அனுபவித்து வருகின்றதைப் பார்க்கின்றோம். ஏன் இந்த உபத்திரவம் என்று நாம் ஒருவேளை யோசிக்கலாம். பலர் பலவிதமான காரணங்களை இதற்கு கொடுக்கலாம். அவற்றை வேதவசனத்தின் அடிப்படையில் உங்களுக்கு எழுதி உங்களை ஸ்திரப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு இச்செய்தியை உங்களுக்கு வழங்குகிறேன்.

தாவீது என்னும் பக்தன், **"நான் உபத்திரவப் பட்டது எனக்கு நல்லது"** என **சங்கீதம் 119: 71ம்** வசனத்தில் கூறுகிறான். நம்முடைய பரிசுத்த வேதத்திலும், இயேசு கிறிஸ்துவின் போதகத்திலும் உபத்திரவத்தை குறித்து நல்ல அனுபவமாக எழுதப் பட்டுள்ளதை நாம் பார்க்கலாம். உபத்திரவங்களை குறித்து எழுதப்பட்டிருக்கிற எல்லா வசனங்களிலும் உபத்திரவப்படுவது நல்லது, நீங்கள் இதனால் நிறைய நன்மைகளை அடைவீர்கள் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. முக்கியமாக இயேசு கிறிஸ்து,

**நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு.**

**- மத்தேயு 5 : 39**

**ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன் - மாற்கு 8 : 34** என்று தம்முடைய சீஷர்களை பார்த்து கூறுகின்றார். இதை ஒரு ஆசீர்வாதமாக நாம் பார்க்கவே முடியாது. இந்தக் குறிப்பு யாரையுமே கவர்ந்திழுக்காதஒரு பிரசங்கம் அல்லது உபதேசம் என்று கூறலாம். யாராவது ஒரு பிரசங்கியாரோ, உபதேசியாரோ, போதகரோ அல்லது பெரிய தலைவரோ "என் பின்னே வருவீர்கள் என்றால் உங்களுக்கு கண்டிப்பாக சிறைச்சாலையே! நிச்சயமாக உங்களுக்கு உபத்திரவம் உண்டு என்று கூறினால் யாருமே அவருக்கு பின்னால் போகவே மாட்டார்கள். ஆனால் இயேசு ஒருவர் தான் **"ஒருவன் என் பின்னே வர விரும்பினால் தன் சிலுவையை எடுத்துக் கொண்டு, தன்னைத் தானே வெறுத்து என்னை பின்பற்றக்கடவன்"** என்று கூறுகிறார். ஒருவருடைய பாடுகள் இன்னொருவருக்கு பாடுகளாக தெரியாது. இந்த பாடுகளால், உபத்திரவங்களால் அநேகர் அதாவது கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள், இயேசுவை தெரியும் என்று சொல்கிறவர்கள் தேவனுடைய வழியைவிட்டு மாறிப் போகிறதை நாம் காண்கிறோம். அதைக் குறித்தும் இயேசு முன்பே சொல்லிவிட்டார்.

**தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியால், கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருக்கிறார்கள், வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறார்கள்; இவர்களே கற்பாறை நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள்**

**- மாற்கு 4 : 17**

மேற்கூறப்பட்டுள்ள உவமையில் கற்பாறையில் விழுந்த விதையானது சீக்கிரம் வளரும். ஆனால் அதிக நாள் இருக்க முடியாது. இப்படித்தான் உலகத்தில் இயேசுவை பின்பற்றுகிற ஒருசிலர் உள்ளனர். **"இயேசுவை பின்பற்றினால் என் வியாதி சுகமாகும், என் கடன் பிரச்சனை தீரும், எனக்கு சமாதானம் கிடைக்கும் என்று நினைத்தேன். ஆனால் அது நடக்கவில்லை"** எனக் கூறி பின்மாற்றம் அடைகின்றனர். அப்படியென்றால் இயேசுவை பின்பற்றுகிற நமக்கு உபத்திரவங்கள்

நல்லதா? என்று கேட்டால் ஆம்! நல்லது தான் அதில் எந்த சந்தேகமும் இல்லை எனநாம் சுலபமாக சொல்லிவிடலாம், ஆனால் நடைமுறை வாழ்க்கையில் வாழும்பொழுது அந்த உபத்திரவத்தின் பாதை நமக்கு கண்ணீரை உருவாக்குவதாக இருக்கலாம். அதனால் தான் தாவீது ஒரு சங்கீதத்தில் உபத்திரவத்தின் மிகுதியில் எழுதும்பொழுது **"எனக்கு புறாவை போல் சிறகுகள் இருந்தால் எங்கேயாவது பறந்து சென்று விடுவேனே"** என்கிறான். அப்படித் தான் அநேக சமயங்களில் நாமும் நினைப்போம். எங்கேயாவது ஓடிவிடலாமா, என்றைக்கு விடியல் வரும் என்று நினைக்கிற வாழ்க்கையே இந்த உபத்திரவத்தின் வாழ்க்கை. இருப்பினும் இந்த உபத்திரவங்கள் நம்முடைய வாழ்க்கையில் என்னென்ன நன்மைகளை விளைவிக்கிறது என்று பார்ப்போம்.

## உபத்திரவம் - தேவனிடம் நம் கவனத்தை திருப்புகிறது

உபத்திரவங்கள் வரும்பொழுது நம்முடைய கவனம் முழுவதும் தேவனை நோக்கியே திரும்புகிறது. **ஒரு சமயம் சகோதரர்கள் இருவர் சாலையோரம் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்படி விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது மூத்த சகோதரனுக்கு காலில் அடிபட்டு இரத்தம் வழிய ஆரம்பித்தது. இதைப் பார்த்து பயந்த இளைய சகோதரனுக்கு என்ன செய்வது என்று தெரிய வில்லை. யாரையாவது உதவிக்கு அழைக்க வேண்டும் என்றால் யாருமே அருகில் இல்லை. ஆனால் சாலையில் நிறைய கார் போய்க் கொண்டும், வந்து கொண்டும் இருந்ததை அவன் கவனித்தான். இவனோ சிறுவன் என்பதால் சாலையை கடக்கவும் பயமாக இருந்தது. மூத்தவனால் நடக்கவே முடியவில்லை. அவன் அப்படியே சோர்ந்துபோய் ஒரு இடத்தில் உட்கார்ந்து அழுது கொண்டே இருந்தான். இந்த இளைய சகோதரன் சாலையில் வருகின்ற எல்லா காரையும் பார்த்து கையை காட்டி அசைக்கிறான், ஆனால் ஒருவரும் காரை நிறுத்தவில்லை. கடைசியில் அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. சகோதரனை தூக்கிக் கொண்டு கொஞ்ச தூரம் நடந்து பார்த்தான் அதுவும் முடியவில்லை. எனவே யோசித்துக் கொண்டே சுற்றிலும் பார்த்தான். அங்கே கல் ஒன்று இருந்தது. அந்த கல்லை எடுத்து வேகமாக சென்றுக்கொண்டிருந்த காரின் மீது எறிந்தான். உடனே அந்த கார் நின்றது. அந்த காரின் முதலாளி இறங்கி வந்து எதற்கு என் கார் மேல் கல் எறிந்தாய்? என்று சத்தமிட்டார். அதற்கு இளைய சகோதரன் அழுதுக்கொண்டே "என்னை அடிப்பதற்கு முன் எனது சகோதரனுக்கு உதவி செய்யுங்கள். மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வேண்டும், யாருமே இந்த சாலையில் தங்கள் வாகனத்தை நிறுத்தவில்லை, எனக்கு வேறு வழி தெரியவில்லை என்பதால் இந்த கல்லை எறிந்தேன். எங்களுக்கு தயவு செய்து உதவுங்கள்" என்று கெஞ்சினான். அவன் கேட்டுக்கொண்ட படியே அந்த மனிதர் அவர்களுக்கு உதவிச் செய்தார்.**

ஆம் பிரியமானவர்களே! இப்படித் தான் நம்மில் அநேகருடைய வாழ்க்கையில் அவ்வப்பொழுது ஒரு கல் வந்து விழும். நம்முடைய அன்றாட வாழ்க்கையில் கர்த்தருக்கு ஒரு இடம் இல்லாமல் போகும் பொழுது, தேவன் **"என்னை மறந்து என் பிள்ளை ஓடிக் கொண்டிருக்கிறான், ஒரு கல்லை விட்டால் நிச்சயம் இவன் என்னை நோக்கி திரும்பி பார்ப்பான்"** என நம் வாழ்க்கையில் கல்லை தேவன் அனுமதிக்கிறார். உபத்திரவப்படும் பொழுது தான் **"கர்த்தாவே நீர் இருக்கிறீரா?"** என்ற கேள்வி வரும். இப்படிப்பட்ட கேள்விகள் நம்முடைய மூளைக்கு எப்படி வருகிறது, ஏன் வருகிறது என்று யோசித்து பாருங்கள். ஒரு சிறு குழந்தையை எடுத்துக் கொள்வீர்கள் என்றால் அதற்கு ஏதாவது ஒரு வேதனை வந்தால் அருகில் எத்தனை பேர் இருந்தாலும் தன் தாயை தான் தேடும். தாயினால் மாத்திரமே தன்னுடைய பிரச்சனைக்கு முடிவு வரும் என்று அந்த குழந்தைக்கு தெரியும். அதைப்போலவே நாம் நினைக்கிறோமா, இல்லையோ நம்முடைய மூளை தன்னை உண்டாக்கின தேவனை நோக்கி பார்க்கிறது. என்னுடைய இந்தப் பிரச்சனை வேறு யாராலும் முடிவுக்கு வராது, நிச்சயமாய் என்னை உருவாக்கிய தேவனால் தான் முடிவிற்கு வரும் என்று சொல்லி நம்மையும் அறியாமல் நம்முடைய இருதயம், மூளை, நமது சிந்தனை தேவனை நோக்கி திருப்பப்படுகிறது. அப்படி திருப்பப்படும் பொழுது நமக்கு ஒரு விடுதலை உண்டாகிறது.

அன்னாள் தன்னுடைய கஷ்டத்தில் கர்த்தரை நோக்கி பார்த்தாள். தேவ சமூகத்தில் கண்ணீரை ஊற்றினாள். சிம்சோனுடைய வாழ்க்கையில் என்ன நடந்தது. தேவனால் அழைக்கப்பட்டவன்,

கர்த்தருடைய அழைப்பையும், தேவன் தன்னை தெரிந்துகொண்ட விதத்தையும் மறந்துபோய் பெலிஸ்தியரோடு சேர்ந்து உறவாடுகிறான். அந்த உறவுகள் அவனுக்கு வேதனையை மாத்திரம் உண்டாக்கியது. ஆனால், **"அப்பொழுது சிம்சோன் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தராகிய ஆண்டவரே, நான் என் இரண்டு கண்களுக்காக ஒரே தீர்வையாய்ப் பெலிஸ்தர் கையிலே பழிவாங்கும்படி, இந்த ஒருவிசைமாத்திரம் என்னை நினைத்தருளும், தேவனே, என்னைப் பலப்படுத்தும் என்று சொல்லி" (நியாயா. 16:28)** தன்னுடைய கஷ்டத்திலே சிம்சோன் தேவனை நோக்கி பார்க்கிறான். உபத்திரவம் வரும்பொழுதுதான் தேவனுடைய வல்லமையை நாம் உணர்ந்துக் கொள்கிறோம். **உபத்திரவம் நம்முடைய இயலாமையையும், தேவனால் என்னவெல்லாம் இயலும் என்பதையும் நமக்கு காட்டுகின்றது. உபத்திரவங்கள் நாம் தேவனைத் தேட வழி வகுக்கின்றது**

இஸ்ரவேல் ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட்ட பொழுது அவர்கள் கர்த்தரை நோக்கிப் பார்க்கவே இல்லை. மாறாக **சங்கீதம் 107:6,13,28** வசனங்களை வாசிக்கும் பொழுது **"தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கி கூப்பிட்டார்கள், அவர்கள் இக்கட்டுகளிலிருந்து அவர்களை விடுவித்தார்"** என்று எழுதப்பட்டுள்ளது. ஆபத்திலே இஸ்ரவேல் ஜனங்கள் தேவனை நோக்கி கூப்பிட்டார்கள். தேவனை நோக்கி கூப்பிட வேண்டும் என்ற வாஞ்சை அப்பொழுதே அவர்களுக்கு வந்தது. நாம் அப்படி ஒருபோதும் இருக்கக் கூடாது. ஆசீர்வாதம் வரும்பொழுது எல்லாம் கர்த்தரை மறந்துவிட்டு, கஷ்டம் வரும்பொழுது கர்த்தரை நோக்கி பார்ப்பது தவறான ஒரு காரியம். ஆனாலும் கர்த்தர் உங்களை அதிகமாக நேசிப்பதால் அவர் இந்த உபத்திரவத்தின் மத்தியிலாவது **"என்னுடைய மகன், மகள் என்னை நோக்கிப் பார்ப்பார்களா, என்னோடு நேரம் செலவழிப்பார்களா?"** என ஏங்குகிறார்.

பிரியமான தேவ பிள்ளைகளே! இந்த உபத்திரவ நேரத்தில்தான் கர்த்தருக்கும் உங்களுக்கும் இருக்கிற உறவு பெலப்படும். இப்பொழுதாவது என் பிள்ளை என்னை தேடி வந்து இருக்கிறானே என்று நம்மை கட்டி அரவணைக்கிறவராக இருக்கிறார். வேதத்தில் லோத்தை குறித்து பார்க்கும்பொழுது,

**அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து: யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக் கண்டான். கர்த்தர் சோதோமையும் கோமோராவையும் அழிக்குமுன்னே, சோவாருக்குப் போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும் எகிப்து தேசத்தைப்போலவும் இருந்தது**

**- ஆதி. 13: 10**

சோதோம், கோமோரா சோவார் மட்டும் கர்த்தருடைய தோட்டத்தை போல இருந்ததாகவும், ஆனால், *13-ம்* அதிகாரம், *13-ம்* வசனத்தில் **"சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள்"** என எழுதப்பட்டுள்ளது. இதை லோத்து நினைக்கவே இல்லை. ஏன் நினைக்கவில்லை என்றால், அதைக்குறித்து லோத்திற்கு கவலையே இல்லை. நல்ல நீர்வளம் பொருந்தினதாக, ஆசீர்வாதமாக இருந்தால் போதும் அவர்கள் பாவிகளாக இருந்தால் என்ன, நான் நன்றாக இருக்கிறேன் என்று முடிவு செய்துவிட்டான். அதேபோல நம்முடைய வாழ்க்கையிலும் ஆசீர்வாதம் தொடரும்பொழுது கர்த்தரை நாம் மறந்துபோகக் கூடாது. ஆசீர்வாதத்தை மாத்திரம் நினைக்கிறோம், தேவனை மறந்து போகிறோம்.

அன்பான தேவ ஜனமே! கஷ்டங்கள் வரும்பொழுது கர்த்தரிடம் முறுமுறுக்காதீர்கள். நாம் ஒருவேளை கர்த்தரைவிட்டு தூரமாய் போய் கொண்டிருக்கலாம். ஆனால் இந்த உபத்திரவத்தினூடே தேவன் யார் என்றும், அவருடைய பலத்த கரம் எப்படி மீட்கப்போகிறது என்பதையும்நான் புரிந்து கொள்ள போகிறேன் என்ற தைரியத்துடன் காணப்பட வேண்டும். அதனால்தான் உபத்திரவம் நல்லது. யோபு உபத்திரவப்பட்டான் அந்த உபத்திரவத்தின் மத்தியில்,

**என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்.**

**இந்த என் தோல்முதலானவை அழுகிப்போன பின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்.**

**அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்; இந்த வாஞ்சையால் என் உள்ளிந்திரியங்கள் எனக்குள் சோர்ந்துபோகிறது யோபு 19 : 25-27**

தேவன் மிக மிக வல்லமையுள்ளவர் என்று யோபு அறிந்துக் கொண்டான். ஏன் உபத்திரவத்தை கர்த்தர் அனுமதிக்கிறார் என்று அவரை நாம் கேள்வி கேட்கவே முடியாது. அதனால் தான் எல்லா

வற்றுக்கும் சான்றாக (Summary) **யோபு 42:2ல்** யோபு **"தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்"** என கூறுகிறான். இதற்காகத்தான் உபத்திரவம் நல்லது என்று சொல்கிறோம். ஒருவேளை யோபு அந்த உபத்திரவத்தை அனுபவிக்கவில்லை என்றால் அவன் ஒரு அரசனை போல வாழ்ந்திருப்பான், அவ்வளவுதான், அவனுடைய சரித்திரத்தை வாசிப்பீர்கள் என்றால் ஏசா வம்சத்தில் பிறந்த யோவாப் என்கிற ஒரு ராஜகுமாரன் அவன். ஒரு நல்ல வாழ்க்கையை வாழ்ந்தவன் என்பதோடு முடிந்திருக்கும். ஆனால் இந்த உபத்திரவத்தின் மத்தியிலே தன்னுடைய தேவன் யார் என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

அன்பானவர்களே! உங்களுக்கும் எனக்கும் தேவனாக இருக்கிறவர் நமக்கு உபத்திரவத்தை அனுமதிக்கும் பொழுது அதை நாம் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். என் வாழ்க்கையில் இது நல்லது என்று உபத்திரவத்தின் மத்தியில் நீங்கள் முதலில் நினைக்க வேண்டும். **"என்னை உருவாக்கின தேவன் யார் என்பதை நான் புரிந்து கொண்டேன். என் கவனம் தேவனுக்கு நேராய் திருப்பப்பட்டது. இதனால் நான் நன்மையானவைகளை கற்றுக் கொண்டேன்"** என்று உங்களால் ஆணித்தரமாக சொல்ல முடியும்.

யாக்கோபின் தாய் ரெபெக்காளின் அறிவுரைப்படியே, யாக்கோபு தன் தகப்பனிடமிருந்து எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டாலும். எல்லாவற்றையும் இழந்தவனாக மாறுகிறான். ஏசா மட்டும் அன்றைக்கு யாக்கோபை துரத்தவில்லை என்றால், அங்கு தேவன் யாக்கோபோடு ஒரு உடன்படிக்கை செய்திருக்க முடியாது, இஸ்ரவேலாக மாறியிருக்க முடியாது. **ஆதி. 28:10** முதல் படிக்கும் பொழுது யாக்கோபு கல்லின் மேலே தலையை வைத்து படுத்திருந்தான். அப்படி படுத்திருக்கும் பொழுதுதான் அங்கு தேவனுக்கும், அவனுக்கும் ஒரு உடன்படிக்கை ஏற்படுகிறது. அவன் தன் அம்மாவோடு சந்தோஷமாக இருக்கும்பொழுது, கூடாரத்தில் கூழ் காய்ச்சி கொண்டிருந்த பொழுது உடன்படிக்கை ஏற்படவில்லை. யாக்கோபு தனிமையில் கல்லின் மீது தலை வைத்திருந்த பொழுது உடன்படிக்கை ஏற்பட்டது. ஆம், பிரியமானவர்களே, நம்முடைய உபத்திரவங்கள் தேவனோடு நாம் நெருங்கவும், நம் கவனத்தை அவர் பக்கம் திருப்பவும் உதவுகின்றது.

## உபத்திரவம் - நம் வாழ்க்கையின் நோக்கத்தை அறிந்து கொள்ள உதவுகிறது!

உபத்திரவம் எதற்காக நமக்கு கொடுக்கப்படுகிறது? நம்முடைய நோக்கம் என்ன என்பதை நாம் புரிந்துகொள்வதற்காக இது அனுமதிக்கப்படுகிறது. சில நேரங்களில் நமது நோக்கம் வித்தியாசமாக இருக்கும். சிலருக்கு காலையில் எழுந்தவுடன் சாப்பிட வேண்டும், மீண்டும் தூங்க வேண்டும் என்பது மட்டும் தான் நோக்கமாக இருக்கும். சிலர் ஏதோ வேலைக்கு சென்றோம், வந்தோம் இது போதும் என்ற ஒரு சாதாரண வாழ்க்கையே வாழ்வார்கள். சிலர் எனக்கு நோக்கமே இல்லை என்பார்கள். தேவனோ தம் பிள்ளைகளுக்கு பெரிய நோக்கத்தை வைத்திருப்பார். இந்த பெரிய நோக்கத்தை நம்மை அறியாமலேயே நாம் மறந்துவிட்டு தூரமாய் போய் கொண்டே இருப்போம். நமக்கு அந்த நோக்கம் தெரியாது. அந்த நோக்கத்தை நீங்கள் அறிந்து கொள்வதற்கு அந்த நோக்கத்திற்கு நேராய் செல்வதற்கு தேவன் உங்கள் வாழ்க்கையில் உபத்திரவத்தை அனுமதிக்கிறார். நம் வாழ்க்கையில் நாம் பலவிதங்களில் உபத்திரவம் படும்பொழுது ஏன் என்று கேள்வி கேட்டு அதை அப்படியே மறந்து போய்விடுவோம். நீங்கள் வேதத்தை நன்றாக வாசிப்பீர்கள் என்றால் ஒவ்வொரு தேவ மனுஷருடைய அழைப்பிற்கு முன்பாகவும் ஒரு உபத்திரவம் வந்தது.

தாவீதை கர்த்தர் அபிஷேகம் செய்த பிற்பாடு, சவுல் அவனை சந்தோஷமாக வைத்திருந்தான் என்றால், தாவீது கடைசி வரை சவுக்கு ஒரு வேலைக்காரனாகவே இருந்திருப்பான்.

மோசே பார்வோனின் அரண்மனையில் இருந்தபொழுது தன் மக்களுக்காக துணை நின்று கொலை செய்தான். அதைக்குறித்து எந்த பிரச்சனையோ, கேள்வியோ வரவில்லை என்றால் மோசேயும் பார்வோன் அரண்மனையில் சந்தோஷமாக இருந்திருப்பான். அவனுக்கு தன்னுடைய ஜனங்களை விடுதலையாக்க வேண்டும் என்ற எண்ணமே வந்திருக்காது.

எல்லாவற்றையும்விட ஆபிரகாமுடைய வாழ்க்கையை பாருங்கள், ஆபிரகாம் கேட்டது எனக்கு ஒரு குமாரன் இல்லையே என்று. ஆனால்

கர்த்தர் தெளிவாக இஸ்மவேலை நான் ஆசீர்வதிப்பேன். **ஆனால் உன் கர்ப்பப்பிறப்பா யிருப்பவனே உனக்கு சுதந்தரவாளி என்று உடன் படிக்கை செய்கிறார். நீ ஒரு குழந்தை கேட்கிறாய். நான் உன்னை குறித்து வைத்திருக்கிற நோக்கம் நீ ஜாதிகளுக்கு தகப்பன் ஆக வேண்டும் என்பதே என வாக்குப் பண்ணுகிறார். (ஆதி. 15: 2-6; 17:4).** ஆபிரகாம், தான் திரளான ஜாதிகளுக்கு தகப்பன் ஆகவேண்டும், அநேகருக்கு தான் ஆசீர்வாதமாக இருக்க வேண்டும் என்றெல்லாம் ஒரு நாளும் கேட்கவில்லை. அப்படி நினைக்காத ஆபிரகாமை தேவன் அழைத்து **"நீ இப்படிதான் ஆசீர்வதிக்கப் படுவாய்! இது தான் என்னுடைய நோக்கம்"** என்று கூறினார். அதனால் தான் 25 ஆண்டுகளாக பிள்ளையில்லாமல் ஆபிரகாம் வேதனை அடைந்தான். உபத்திரவத்தின் மத்தியில் ஆபிரகாம் தேவனை புரிந்துகொண்டான்.

யோசேப்பு நான் பார்வோனுக்கு அதிபதியாவேன், பார்வோனுடைய அரண்மனையில் இருப்பேன் என்று நினைத்து பார்க்கவே இல்லை. அரண்மனைக்கு போக வேண்டும் என்று அவன் நினைக்கவில்லை. ஆனால் தேவனோ ஒரு உபத்திரவத்தை அனுமதித்தார். அவன் சகோதரர்களே அவனை விற்றுப் போட்டார்கள். முடிவில் கர்த்தர் அவனை அதிபதியாக மாற்றினார்.

அன்பு சகோதர, சகோதரிகளே! உபத்திரவம் வரவில்லை என்றால் வாழ்க்கையில் உங்கள் நோக்கம் என்ன என்றே உங்களால் புரிந்துக்கொள்ள முடியாது. யோசேப்பு உபத்திரவப்பட்டு இருக்கவில்லை என்றால் அவன் வீட்டிலே செல்ல குமாரனாகவே இருந்திருப்பான். கர்த்தர் இவர்கள் எல்லாருக்கும் பெரிய நோக்கத்தை வைத்திருந்தார். அந்த நோக்கம் நிறைவேறுவதற்காக அவர்கள் வாழ்க்கையில் உபத்திரவத்தை தேவன் அனுமதித்தார். சீஷர்களுடைய வாழ்க்கையில் உபத்திரவம் வந்தது,

**ஸ்தேவான் நிமித்தமாய் எழும்பின உபத்திரவத்தினாலே சிதறப்பட்டவர்கள் சுவிசேஷ வசனத்தை யூதர்களுக்கேயன்றி மற்ற ஒருவருக்கும் அறிவியாமல்; பெனிக்கே நாடு, சீப்புருதீவு, அந்தியோகியா பட்டணம்வரைக்கும் சுற்றித்திரிந்தார்கள் - அப். 11: 19**

சீஷர்கள் எருசலேமில் இருப்பது மாத்திரம் அவர்கள் நோக்கமல்ல. ஒருவேளை யூதர்கள் பிரச்சனை செய்யாமல் இருந்திருந்தால், யாரும் உபத்திரவம் கொடுக்கவில்லை என்றால் அவர்கள் சந்தோஷமாக எருசலேமில் இருந்து இயேசுவை பற்றி சொல்லிக் கொண்டு இருந்திருப்பார்கள். ஆனால் தேவன் அவர்களுக்கு வைத்திருந்த நோக்கம் மிகப்பெரியதாக இருந்தது. சீஷர்கள் உலகெங்கும் சிதறிப் போனார்கள். சுவிசேஷம் பரவினது!

எஸ்தரின் வாழ்க்கையை பாருங்கள். தாய் தகப்பனில்லாத அவளை, அவளுடைய சித்தப்பா மொர்தெகாய்தான் வளர்க்கிறார். 127 நாடுகளை அரசாண்ட ராஜாவாகிய அகாஸ்வேறுவின் கண்களில் எஸ்தருக்கு தயை கிடைத்தது. ராஜா சகல ஸ்தீரிகளை பார்க்கிலும் எஸ்தர் மேல் அன்பு வைத்தான். எஸ்தர் தெரிந்துக்கொள்ளப்பட்டு விட்டாள். அதன்பிறகு, அந்த காலக் கட்டத்தில் ஆமான் என்கிற மனுஷன் ராஜாவினிடத்தில், ஒரு குறிப்பிட்ட மக்கள் பிரச்சனை செய்கிறார்கள். அந்த ஜனங்களை அழிக்க வேண்டும் என நயவஞ்சக எண்ணத்துடன் கேட்கிறான். ராஜாவும் தன்னுடைய மோதிரத்தை கழற்றி ஆமான் கையில் கொடுத்துவிட்டு, என்ன வேண்டுமென்றாலும் செய் என்கிறான். அங்கு சூசான் நகரம் கலங்கிற்று என வேதத்தில் எழுதப்பட்டுள்ளது. எஸ்தர் தனது சித்தப்பா மொர்தெகாயிடம் ஆள் அனுப்பி என்னவென்று கேட்கிறாள். **"யூதர்களை அழிக்கும்படி சூசானில் பிறந்த கட்டளையின் நகலையும் அவனிடத்தில் கொடுத்து, அதை எஸ்தருக்குக் காண்பித்துத் தெரியப்படுத்தவும், அவள் அகத்தியமாய் ராஜாவினிடத்திற் போய், அவனிடத்தில் தன் ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணவும் மன்றாடவும் வேண்டுமென்று அவளுக்குச் சொல்லச் சொன்னான்" (எஸ்தர் 4:8).** ராஜாவிடம் சாதாரணமாக யாரும் பேசவே முடியாது என எஸ்தர் சொல்கிறாள், ராஜா அனுமதி இல்லாமல் நான் உள்ளே சென்றால் என்னை கொலை செய்து விடுவான் என பயப்படுகிறாள். அப்பொழுது மொர்தெகாய், **"நீ இந்தக் காலத்திலே மவுனமா யிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும், என்று சொல்லச்சொன்னான்" (எஸ்தர் 4:14)** இதற்காகவே ராஜ மேன்மை கிடைத்திருக்கலாம் எனக் கூறுகிறான். ஒருவேளை யூதர்களுக்கு இந்த உபத்திரவம் வராத பட்சத்தில்

எஸ்தர் யாருக்குமே தெரியாத ஒரு யூத ராணியாக மரித்து போய் இருப்பாள். தன்னுடைய உயிரை பணயம் வைத்து ராஜாவின் சமூகத்திற்கு போய் கெஞ்சி தேவன் கொடுத்த ஞானத்தை பயன்படுத்தி, உபவாசம் இருந்து, ஜெபித்து ராஜாவிடம் ஆமானின் நயவஞ்சகத்தை கூறி தன்னுடைய ஜனங்களுக்கு மிகப்பெரிய விடுதலையை வாங்கிக் கொடுக்கிறாள். **எஸ்தர் ஒன்பதாம் அதிகாரத்தை நீங்கள் வாசிப்பீர்கள் என்றால் இந்த பெரிய விடுதலையை பூரீம் என்கிற விழாவாக அந்த தேசத்து யூதர்கள் கொண்டாடுகின்றனர். அந்த விழா இன்றும் இஸ்ரவேலில் கடை பிடிக்கப்படுகிறது. எஸ்தர் தங்களுக்கு பெற்றுக் கொடுத்த மகா பெரிய விடுதலையை இன்றளவும் யூதர்கள் ஆசரிக் கிறார்கள்.**

ஆம் அன்பானவர்களே! வாழ்க்கையில் நமது நோக்கம் சாதாரணமாக இருக்கலாம். **ஏசாயா 48:10ம்** வசனத்தின்படி தேவனுடைய தெரிந்து கொள்ளுதலே உபத்திரவத்தில் தான். நம்முடைய வாழ்க்கையின் நோக்கத்தை தெரிந்துகொள்வதற்கு உபத்திரவம் உதவுகிறது. எனவே இந்த உபத்திரவத்தினால் நாம் சோர்ந்து போகக் கூடாது. இதில் என் வாழ்க்கையின் நோக்கம் என்னவென்று தேவனிடம் கேளுங்கள். அப்பொழுது தேவன் உங்களை குறித்த வைத்திருக்கும் நோக்கத்தை உங்களுக்கு வெளிப்படுத்துவார். அது உங்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தை கொடுக்கும் வண்ணமாக இருக்கும்.

## உபத்திரவம் - மறுரூபத்தையும், பரிபூரணத்தையும் உண்டாக்குகிறது!

உபத்திரவம் நமது வாழ்க்கையில் மாற்றத்தையும், பரிபூரணத்தையும் உண்டாக்குகிறது. உபத்திரவப்படுவதால் நாம் எப்படி பரிபூரணப்பட முடியும் என்று நீங்கள் கேட்கலாம். ஆதி பக்தர்கள், சீஷர்கள் தேவ தாசர்களை நாம் பார்க்கும்பொழுது, அவர்கள் சந்தித்த உபத்திரவங்களுக்கு பிறகுதான் ஒரு பெரிய மாறுதல் அவர்கள் வாழ்க்கையில் உண்டாகிறது. **அப்போஸ்தலர் 1:8ம்** வசனத்தில் பரிசுத்த ஆவியினால் அவர்கள் நிரப்பப்படுகிறார்கள். **அப்போஸ்தலர் 2,3,4,5-**ஆம் அதிகாரத்தை வாசிக்கும் பொழுது அங்கே ஒரு பெரிய அறுவடையை கர்த்தர் கட்டளையிடுகிறார். அநேகம் பேர் இரட்சிக்கப்படு கிறார்கள், சபையில் சேர்க்கப்படுகிறார்கள். தொடர்ந்து நீங்கள் அந்த புத்தகத்தை வாசிக்கும் பொழுது சீஷர்கள் ஒரு இடத்தில் இருந்தார்கள் என்றே நீங்கள் பார்க்க முடியாது. பவுல், பேதுரு, பர்னபா, மாற்கு யாவரும் உலகமெங்கும் பரவினார்கள். அது தான் மாற்றம், அதுதான் பரிபூரணம். உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்று கர்த்தர் கூறினார். இந்த கொஞ்ச சீஷர்கள் உலகமெங்கும் போய், எப்படி சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள். உபத்திரவம் வர வர அவர்கள் வெளியே சென்றார்கள். யூதேயா தேசம் மாத்திரம் அல்லாமல் சமாரியா, ரோம் ஏன் இங்கிலாந்து தேசம் வரைக்கும் சென்றிருக்கிறார்கள். இந்தியாவிற்கும் வந்து சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது இந்த உபத்திரவத்தினால் தான். உபத்திரவம் வந்தபடியால் தான் அவர்களுக்கு புரிந்தது. நாம் இங்கிருந்து பிரயோஜனமில்லை. நாம் எல்லா இடத்திற்கும் சென்று சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் அப்பொழுது ஒரு மாற்றம், பரிபூரணம் உண்டாகும் என அறிந்துகொண்டார்கள். அப்படியே நடக்கவும் செய்தது.

**அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டு, தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள். அப்போஸ். 4:31**

**அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்ட படியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தை விட்டுப் புறப்பட்டுப்போய், அப்போஸ்.5:41**

உபத்திரவம் நம்மை மறுரூபமாக்குகிறது. இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்காகவும், அவருடைய நாமத்தின் மகிமைக்காகவும் நாம் அவமானங்களை சந்திக்கிறோம். நம்மை மற்றவர்கள் அவமானப் படுத்தினாலும் ஒருபோதும் தேவாதி தேவனையும், பரிசுத்த ஆவியானவரை அவமானப்படுத்த முடியாது. எனவே சோர்ந்து போகாதீர்கள். **இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப் பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருக் கிறீர்களே. (1 தெச.3:3)**

நீங்கள் கிறிஸ்துவுக்காக சிலுவையில் அறையப்படும்பொழுது மறுரூபமாகும் அனுபவத்தையே பெறுகிறீர்கள் என்பதை மறவாதீர்கள். குயவன் கையில் உள்ள களிமண்ணை வனைவது போல கர்த்தரும் உங்களை உபத்திரவத்தின் வழியாக அழகான பாண்டமாக வனைகிறார். **நம்முடைய சிலுவையின் வேதனைகள் அனைத்தும் பின்பு அழகான ரோஜா பூவைப் போல மாறிவிடும். நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை, கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை. (2கொரி. 4:8)**

உபத்திரவம் நம்மை சோர்வடைய செய்வதில்லை. நம்மை விசேஷித்தவர்களாய் மாற்றுகிறது. நம்மை வேலைக்காரர்களாக அல்ல. சுதந்திரவாளிகளாக மாற்றுகிறது. சுதந்திரவாளி போராட்டங்கள் வழியாகவே சுதந்தரங்களை பெற்றுக்கொள்கிறான்.

★ தாவீது உபத்திரவங்களின் வழியாக எல்லோராலும் போற்றப்படுகிற ராஜாவாக மாறினார்.

★ யோசேப்பு உபத்திரவங்களின் வழியாக அநேக தேசங்களை போஷிக்கிறவராக மாறினார்.

★ யாக்கோபு உபத்திரவங்கள் வழியாக தேவனை சார்ந்து வாழ கற்றுக்கொண்டான்.

கர்த்தர் நம்மை நேசிக்கிறபடியால்தான் உபத்திரவங்களை அனுமதிக்கிறார். உபத்திரவங்கள் நம் வாழ்வில் நன்மைகளையே தருகிறது. பரிசுத்த ஆவியானவர் நம் ஏக்கங்களை அறிந்து நம்மை மறுரூபப்படுத்துகிறார். ஆகவே கர்த்தருக்கு நம்மை முழுவதுமாக ஒப்புக்கொடுக்கும்பொழுது அவர் செயலாற்றுகிறார்.

பிரியமானவர்களே! உபத்திரவம் இல்லாத வாழ்க்கையை நாம் பார்க்கவே முடியாது. அதுவும் கிறிஸ்தவ வாழ்க்கையை நாம் நினைத்து கூட பார்க்கவே முடியாது. **இயேசுவை பின்பற்றுகிறவர்கள் சிலுவையை சுமந்து கொண்டு தான் போக வேண்டும். அதில் ஒரு வித்தியாசம் மகிழ்ச்சி என்னவென்றால் என்னோடுகூட இயேசுவும் என் பாரத்தை சுமக்கிறார் என்பதுதான் உண்மை.** சிலுவையின் பாரம் என்னை அழுத்தாதபடிக்கு தேவனுடைய வல்லமை என்னில் விளங்குகிறது, அவருடைய ஆறுதல் எனக்குள்ளே விளங்குகிறது, உபத்திரவத்தை கடந்து செல்லும் பொழுது அவர் உங்களைமெருகேற்றி, உருவாக்குகிறார் என்பதை நீங்கள் நன்றாக உணரவும் முடியும். பரிசுத்த ஆவியானவரின் உருவாக்குதல் வரவேண்டும் என்றால் நாம் அவருடைய பாடுகளுக்கு, அவருடைய வல்லமைக்கு கீழ்ப்படிந்து நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். சாத்தானுக்கு நம்மை ஒருபோதும் ஒப்பக் கொடுக்கக் கூடாது. பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள்ளே இருக்கும்பொழுது இந்த உபத்திரவத்தினூடே அவர் உங்களை அழகாக உருவாக்கி இந்த உபத்திரவத்தின் மூலமாக உங்களுக்குள் பெரிய மாற்றத்தை உண்டாக்குவதோடு, உங்களை அநேகருக்கு ஆசீர்வாதமாகவும் வைப்பார். அதற்கு நாம் செய்ய வேண்டியது எல்லாம் பரிசுத்த ஆவியானவருக்கு நம்மை விட்டு கொடுக்க வேண்டும். ஆவியானவரே என்னை நீர் மாற்றுங்கள், நான் எப்படி உம்மை பின்பற்ற வேண்டும், என்னை எப்படி உருவாக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களோ அப்படி உருவாக்குங்கள் என்று அவரிடம் கேளுங்கள். ஒவ்வொரு நாளும் நம்முடைய பாடுகளின் நிமித்தம் அநேகர் ஆறுதல் அடையவேண்டும். உங்கள் மூலமாக உங்கள் உபத்திரவத்தால் மற்றவர்களுக்கு ஆறுதல் வரவில்லை என்றால் அதில் ஒரு பிரயோஜனமும் கிடையாது. சீஷர்கள் எவ்வளவு உபத்திரவத்தை அடைந்தார்கள். அதனால் தான் நாம் இன்று சந்தோஷமாக இருக்கிறோம். அத்தகைய காலங்கள்தான் இப்பொழுதும் இருக்கிறது. இந்த நாட்களின் கணக்கின்படி ஒவ்வொரு ஆண்டும் பல ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் தேவனுக்காக பாடுபடுகிறார்கள். நாம் அப்படிப்பட்ட மக்களை நினைத்து பார்க்க வேண்டும், அவர்களுக்காக நம்முடைய ஜெபங்களில் ஜெபிக்க வேண்டும். கருவில் உங்களை தெரிந்துகொண்ட தேவன் உங்களை கைவிட மாட்டார். கடைசி மட்டும் அற்புதமாக வழி நடத்துவார். கலங்காதீர்கள்! கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக!

dranandastira@mojindia.org, margret@mojindia.org, joshua@mojindia.org, jane@mojindia.org, info@mojindia.org

# கிராமங்களில் ஊழியம் செய்யும் ஏழை பாஸ்டர்களுக்கு அன்பரின் ஊழியத்தின் சார்பில் உதவிகள் வழங்கப்பட்டன

பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள் - **ரோமர் 12:13**
தரித்திரரை நினைத்துக் கொள்ளும்படிக்கு மாத்திரம் சொன்னார்கள் - **கலாத்தியர் 2:10**
சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் - **மத்தேயு 10:42**

அன்பான தேவ ஜனமே! இரக்கமுள்ள தேவன் உங்களை பலவிதங்களில் ஆசீர்வதித்து, போஷித்து, காப்பாற்றும் பொழுது, வசதிகள் குறைவான கிராமப் பகுதிகளுக்கு தைரியமாய் சென்று சுவிசேஷ ஊழியம் செய்கிற தேவ ஊழியர்களையும் நாம் கவனிக்க வேண்டும். எனவே தான் அப்படிப் பட்டவர்களுக்கு இந்த உதவிகள் நமது அன்பரின் ஊழியத்தின் மூலம் வழங்கி வருகிறோம்.

நாமக்கல், சேலம், தர்மபுரி, விழுப்புரம், கல்வராயன்மலை, அரூர் ஆகிய பகுதிகளில் ஊழியம் செய்யும் ஏழை ஊழியர்களுக்கு அன்பரின் ஊழியத்தின் சார்பில் இந்த இக்கட்டான கொரோனா காலத்தில் அவர்களுக்கு அத்தியா வசிய தேவைகளான 14 மளிகைபொருட்கள், அரிசி, மாத்திரை மருந்துகள் மற்றும் நல்ல சிற்றுணவும் கொடுக்கப்பட்டது. அவர்கள் செய்யும் ஊழியங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப் பட்டது. அவர்களும் நம்முடைய ஊழியங் களுக்காக அதிக ஊக்கமாய் ஜெபித்தனர். மொத்தம் 200 ஏழை பாஸ்டர்களுக்கு உதவிகள் வழங்கினோம்.

## உதவி பெற்ற போதகர்களின் ஒரு பகுதியினர்




## உதவி பெற்ற போதகர்களின் இன்னொரு பகுதியினர்




# கர்த்தர் செய்த மகத்தான அற்புதங்களில் ஒரு சில உங்கள் பார்வைக்கு...

## சொந்த வீடு கட்டுவதற்கு வாசல் திறந்த தேவன்!

மகள் ஞானகிருபாவிற்கு சொந்த வீடு கட்டப்பட வேண்டுமென அன்பரின் ஊழியத்திற்கு கடிதம் எழுதி ஜெபிக்கக் கேட்டோம். தேவ கிருபையினால் **"கர்த்தர் மகளுக்கு ஒரு வீட்டைக் கட்டித் தருவார்"** என்று **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் பதில் கடிதம் எழுதி இருந்தார்கள். **அதன்படி கடந்த ஜூலை மாதம் 9ம் தேதி 4.18 செண்ட் நிலம் வாங்க தேவன் கிருபை செய்தார்.** அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்! **எனது பொருத்தனையின்படி ஒவ்வொரு மாதமும் தொலைக்காட்சி நிகழ்ச்சியை தாங்கு கின்றேன்.** **- Sis. சுகுணா, திருநெல்வேலி**

## சிறுநீரக நோயை முற்றிலும் நீக்கி சுகத்தை தந்த அற்புதர்!

**எனது மகள் ஆஷா இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இரண்டு சிறுநீரகமும் செயலிழந்த நிலையில் படுத்த படுக்கையானாள்.** மருத்துவ சிகிச்சை தொடங்கும் முன் நாகர்கோவில் விஜயதா திருமண மண்டபத்தில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு மகளை அழைத்துக் கொண்டுவந்து கலந்துகொண்டேன். கூட்ட முடிவில் **Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் தனி ஜெப வேளையில் எனது மகளின் நிலையை கனிவுடன் விசாரித்தார்கள். "கலங்காதீர்கள்! கர்த்தர் நிச்சயம் மகளை பரிபூரணமாய் சுகமாக்குவார், தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை"** என்று கூறி கண்ணீரோடு ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தை கேட்டார். **மருத்துவர்களே ஆச்சரியப்படும் வண்ணமாக சிறுநீரக பிரச்சனை நீங்கி, மகள் இப்பொழுது நல்ல சுகத்துடன் இருக்கிறாள்.** கர்த்தர் கொடுத்த அற்புத சுகத்திற்காக அவருக்கு ஸ்தோத்திரம்!

**- திருமதி. அன்னபாய், நெய்யூர், கன்னியாகுமரி**

## குழந்தை பிறப்பதற்கு தகுதியே இல்லை என்ற மருத்துவரின் கூற்றை மாற்றிப்போட்ட தேவ வல்லமை!

என் மகன் திருமணம் 2016 ஆகஸ்ட் 17ந் தேதி நடைபெற்றது. நான்கு ஆண்டுகளாக குழந்தை இல்லாததின் நிமித்தம் மிகுந்த கவலையடைந்து மகனும், மருமகளும் மருத்துவ பாிசோதனை மேற்கொண்டனர். **பரிசோதனையில் என் மகனுக்கு குழந்தை பிறப்பதற்கு தகுதியே இல்லை என்ற தகவலை மருத்துவர்கள் தெரிவித்தார்கள்.** இதை அறிந்து மிகுந்த துக்கமடைந்தோம், கலங்கினோம். இந்நிலையில் தேவ மனிதர் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களுக்கு கடிதம் மூலம் இந்த தகவலை தெரிவித்தேன். மேலும், மகன், மருமகள் இருவரையும் கடைசி சனிக்கிழமை நடைபெறும் ஜெபத்திற்கும் அனுப்பி வைத்தேன். ஐயா அவர்கள் ஜெபித்து **"மருத்துவர் சொன்ன காரியத்தை குறித்து கலங்காதீர்கள்! கர்த்தர் உங்கள் மகன் மருமகளுக்கு நிச்சயம் குழந்தை பாக்கியத்தை தருவார்"** என்று கூறி அனுப்பினார்கள். **இப்பொழுது மருமகளுக்கு 23.6.2021 அன்று சுகப்பிரசவத்தில் ஆண் குழந்தை பிறந்துள்ளது.** தேவனாகிய கர்த்தர் எங்கள் கண்ணீருக்கு பதில் தந்தார். தேவனுக்கு கோடா கோடி நன்றிகள்.

**- திரு. பெரியநாயகம் ஜேசுராஜ், காரைக்குடி**

## கொரோனா தொற்று நோயிலிருந்து குடும்பத்தினர் அனைவரையும் மீட்ட சர்வ வல்லவர்!



எங்கள் குடும்பத்தில் எனது மகன், மருமகள் மற்றும் மருமகளின் அம்மா ஆகிய மூன்று பேருக்கும் கொரோனோ தொற்று உறுதி செய்யப்பட்டது. இதில் எனது மருமகள் மிகவும் ஆபத்தான நிலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு உயிருக்கு போராடினாள். இதனால் நாங்கள் மிகவும் கலங்கினோம், கண்ணீர் வடித்தோம். இந்நிலையில் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களை தொலைப்பேசி மூலம் தொடர்புகொண்டு மருமகள் நிலையை கூறினேன். சகோதரர் **"கண்ணீரோடும், வல்லமையோடும் மருமகளுக்காகவும், மகன் மற்றும் மருமகளின் அம்மாவிற்காகவும்""** ஜெபித்தார்கள். **கர்த்தர் ஜெபத்தை கேட்டார்! மருமகளின் நிலையில் மாற்றம் ஏற்பட்டது. விரைவில் பரிபூரண சுகமடைந்தாள். மேலும், மகனும், மருமகளின் தாயாரும் கூட அற்புத சுகத்தை தேவனிடமிருந்து பெற்றுக் கொண் டார்கள்.** கர்த்தர் செய்த அற்புதத்திற்காக அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி நன்றி காணிக்கை தருகின்றோம்.

**- திரு. சுந்தர மூர்த்தி, காட்டூர், திருச்சி**

## கழுத்தில் இருந்த கட்டி கரைந்த அதிசயம்!

என் மகள் மெர்சிமோனிக்காவின் **கழுத்துப் பகுதியில் கட்டி ஒன்று உருவாகி, அது நாளடைவில் பெரிய கட்டியாக வளர்ந்து விட்டது.** இதனால் சாப்பிடுவதற்கு கூட மிகவும் கஷ்டப்படுவாள். நாங்கள் அநேக மருத்துவர்களிடம் மகளை அழைத்துச் சென்று சிகிச்சை செய்தோம். எனினும் குணமாகாமல் கட்டி அப்படியே இருந்தது. மகள் நிமித்தம் நாங்கள் மிகுந்த கவலைப்பட்டோம். இந்நிலையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களை திருச்சி ஜெப மையத்தில் சந்தித்து மகள் நிலையை எடுத்துக் கூறினோம். **சகோதரர் மகள் கட்டி மீது கரங்களை வைத்து "இயேசுவின் நாமத்தில் கட்டி கரைந்து போவதாக" என்று கூறி கண்ணீரோடு ஜெபித்தார்கள். அந்த ஜெபத்திற்கு பிறகு நாங்கள் எல்லாரும் ஆச்சரியப்படும் வண்ணமாக அந்த கட்டி தேவ கிருபையால் முழுவதும் கரைந்து போனது.** இதை எங்களால் நம்ப முடியவில்லை. கர்த்தர் செய்த அற்புதத்தை நினைத்து அவரை நன்றியோடு துதிக்கின்றோம். எங்களது நன்றி காணிக்கையை ஊழியப் பணிகளுக்கு தருகின்றோம்.

**- திருமதி. மேரி டேனிஸ் அரசி, பாண்டிச்சேரி**

## பங்காளர் குடும்பத்தில் சர்வ வல்ல தேவன் செய்த அற்புதங்கள் பல...

எனது மனைவி கடந்த 14 ஆண்டுகளாக **சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம், Cholestrol மற்றும் தலைவலியினால் மிகுந்த பாடுபட்டு வந்தார்கள். அனுதினமும் மாத்திரை மருந்துகள் உட்கொண்டே ஆக வேண்டும்.** இல்லையென்றால் அவர்களால் தாங்க முடியாமல் மிகுந்த வேதனைப்படுவார்கள், அவர்களை பார்க்கும்பொழுது எனக்கும் மிகுந்த கவலையாக இருக்கும். மருந்து செலவுகள் ஒரு பக்கம், வேதனை ஒரு பக்கம் என நாட்களை கண்ணீரில் கழித்து வந்தார்கள். **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களது ஜெபத்தினால் **எனது மூத்த மகனுக்கு நாகப்பட்டினத்திலிருந்து மதுரைக்கு பணியிட மாறுதல் கிடைத்தபடியால் அவர்கள் மீது எனக்கு மிகுந்த அன்பும், மதிப்பும்**

**இருந்தது.** எனவே சகோதரரை சந்தித்து ஜெபித்துக் கொண்டால் எனது மனைவிக்கும் சுகம் கிடைக்கும் என நம்பினேன். மேலும், **மருந்து மாத்திரை செலவுகளை அன்பரின் ஊழியப் பணிகளுக்கு தந்துவிடுவதாகவும் பொருத்தனை செய்தேன்.** இந்நிலையில் ஜூலை மாதம் 31ம் தேதி சகோதரரை திருச்சி ஜெப மையத்தில் நானும் எனது மனைவியும் சந்தித்து ஜெபித்துக்கொண்டோம். **சகோதரர் ஜெபிக்கும் பொழுது கர்த்தருடைய வல்லமை எனது மனைவி மீது இரங்கினதை அவர்கள் உணர்ந்தார்கள். அதற்கு பிறகு மருந்து மாத்திரை உட்கொள்வதில்லை. எனினும் நலமுடன் இருக்கிறார்கள்.** இது உண்மையிலேயே தேவன் செய்த அற்புதம்!

அதுமாத்திரமல்ல, 2019ஆம் ஆண்டில் எனது மகள் மற்றும் மருமகன் லண்டனிலிருந்து திருச்சி விமான நிலையம் வந்தார்கள். அவர்களை அழைத்து செல்வதற்காக நான் திருச்சி விமான நிலையம் சென்றிருந்தேன். மகளும் நானும் விமான நிலையத்தில் இருக்கும்பொழுது **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் எதிர்பாராதவிதமாக ஊழியப் பணிகளுக்கு சென்றுவிட்டு திருச்சியில் விமானத்திலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களை கண்டதும் நாங்கள் மிகவும் ஆச்சரியப்பட்டு, அவர்களை அணுகி எனது மகளை அறிமுகப்படுத்தி, லண்டனில் வீடு வாங்க உள்ள தடைகள் நீங்க, பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட ஜெபிக்கும்படி கேட்டேன். **மிகுந்த களைப்புடன் இருந்தாலும் அந்த வேளையிலும் எனது மகளுக்காக பாரப்பட்டு ஜெபித்தார்கள். அந்த ஆண்டிலேயே மகள் லண்டனில் வீடு வாங்க கர்த்தர் கிருபை செய்தார். இது எங்கள் வாழ்நாளில் மறக்க முடியாத மிகப் பெரிய அற்புதமாக நினைக்கின்றேன்.** அந்த நாளிலிருந்து அன்பரின் ஊழியத்தின் மீதும், சகோதரர் மீதும் அன்பும், பாரமும் கொண்டு எங்களால் முடிந்த அளவு ஊழியப் பணியை தாங்கி வருகின்றோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திரு. அருளானந்து, மதுரை**

## நல்ல வேலை அருளின அற்புதர்!



நவம்பர் மாதம் எனது மருமகன் ஜாஷ்வாவிற்கு நல்ல வேலை கிடைக்க வேண்டுமென திருச்சி ஜெப மையம் வந்து **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் ஜெபித்து சென்றேன். **கர்த்தர் ஜெபத்தை கேட்டார்! ஒருசில மாதங்களிலேயே வெளி நாட்டில் நல்லதொரு வேலையை கர்த்தர் அருளினார்.** கர்த்தர் செய்த அற்புதத்திற்காக அவருக்கு ஸ்தோத்திரம்! எங்களது நன்றி காணிக்கையை அன்பரின் ஊழியப் பணிக்கு தருகின்றேன்.

**- திருமதி. அடைக்கம்மை, முசிறி**

## கொரோனா தொற்றிலிருந்து மீண்டு வர கிருபை செய்த தேவன்!



எனது மருமகன் சஞ்சய்குமார் கொரோனா நோயினால் தாக்கப்பட்டார். **அவரது நுரையீரல் முழுவதும் தொற்று பரவி விட்டது. இதன் காரணமாக அவருக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது.** தேசமெங்கும் இந்த நோய் பரவலினால் மருத்துவமனையில் இடம் கிடைப்பதே கஷ்டம் என்ற நிலை, தொடர்ந்து மூச்சு திணறலினால் கஷ்டப்பட்டார். இந்நிலையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களை தொடர்புகொண்டு மருமகன் நிலையை கூறி ஜெபிக்கக் கேட்டோம். **அவர்கள் கனிவுடன் விசாரித்து மருமகனுக்காக பாரத்துடன்**

**ஜெபித்தார்கள். உடனடியாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். மூச்சுத் திணறல் குறைய ஆரம்பித்தது. நாளடைவில் பூரண சுகம் பெற வல்லமையின் தேவன் இரக்கம் செய்தார்.** எங்கள் பயத்தையும், கண்ணீரையும் போக்கின கர்த்தருக்கு நாங்கள் துதிகளை ஏறெடுக்கிறோம். எங்கள் காணிக் கையையும் ஊழியப் பணிக்கு தருகின்றோம்.

**- திருமதி. துளசியம்மாமள், கோயம்புத்தூர்**

## குடும்பத்தினர் அனைவருக்கும் இருந்த சுகவீனத்தை நீக்கி திருமண காரியம் ஆசீர்வாதமாக நடைபெறச் செய்த சர்வவல்லவர்!



எனது மகன் திருமணம் 2021 மே 17ம் தேதி நடக்க முடிவு செய்து பத்திரிக்கைகள் அடித்து அனைவருக்கும் கொடுத்துவிட்டோம். **திருமணத்திற்கு முன்பு 20 நாட்கள் இருக்கும் போது மணமகன் மற்றும் குடும்பத்திலுள்ள நால்வருக்கும் பயங்கர காய்ச்சல் ஏற்பட்டு விட்டது. கொரோனா அலை வீசிக் கொண்டிருந்த நேரம் என்பதால் குறிப்பிட்ட நாளில் திருமணம் நடக்குமா என்று பயந்து கொண்டிருந்தோம்.** இந்நிலையில் அன்பரின் ஊழிய ஜெப மையத்தை தொலைப்பேசி மூலமாக தொடர்பு கொண்டோம். எங்களோடு பேசிய சகோதரியிடம் நிலைமையை கூறி ஜெபித்துக் கொண்டோம். ஜெபித்த சகோதரி **"உங்கள் மகன் திருமணம் நிச்சயித்தபடி மே 17ஆம் தேதியன்று நடைபெறும், நீங்கள் அனைவரும் விரைவில் பூரண சுகமடைவீர்கள்"** என்று கூறினார்கள். **அவர்கள் சொன்னது போலவே நாங்கள் அனைவரும் ஒன்றிரண்டு நாளில் காய்ச்சலிலிருந்து மீண்டு சுகம் பெற்றோம். குறிப்பிட்ட நாளில் மகனுடைய திருமணம் நல்லபடியாக நடைபெற கர்த்தர் கிருபை செய்தார்.** கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- Sis. சந்திரா ராணி, இடையன்குடி**

**Telugu Whats App No: 91770 87860**



# அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம் (Renovation) புதுப்பித்தல் பணிகள்

உங்கள் அனைவருக்கும் தெரிந்தபடி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம் கட்டி முடிக்கப்பட்டு 8 வருடங்கள் ஆகிறது. இதுவரைக்கும் நாம் எந்த பராமரிப்பு பணிகளும் அதில் செய்யவில்லை. குறிப்பாக ஆரம்பத்திலிருந்தே நாம் சில வேலைகளை நிலுவையில் வைத்துள்ளோம். அவை அனைத்தும் கண்டிப்பாக இந்த வருடத்தில் நாம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஏனெனில் ஜெப ஸ்தலத்தில் அநேக இடங்களில் பழுது ஏற்படுகின்றது. நாட்கள் செல்ல செல்ல அது அதிகரித்து விடலாம். எனவே இந்த பராமரிப்பு பணிகளுக்கு உங்கள் உதாரத்துவமான நன்கொடைகளை, உதவிகளை அனுப்பிடுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தேவனுடைய ஜெப ஸ்தலத்தை நீங்கள் பராமரிக்கும் பொழுது கர்த்தர் உங்களுடைய குடும்பத்தையும் ஆசீர்வதித்து பெருகச் செய்வார்.

( Rs.20,000/- கொடுக்கக் கூடிய 100 நபர்கள்)

**தேவைப்படுகின்ற தொகை – Rs.20,00,000/-**

இப்பொழுது நமது வெப்சைட்டிலும் உங்கள் உதாரத்துவமான காணிக்கைகளை அனுப்பலாம்.

**ministryofjesus.in-donate**

## அன்பரின் ஆறுதல் TV நிகழ்ச்சி நேரங்கள்

நம்பிக்கை TELEVISION

திங்கள், செவ்வாய், புதன்
காலை 6.30 – 7.00

புதன்
மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00


### தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

ARADANA TV
புதன், வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

### மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

HARVEST tv
சனி இரவு 07.30 – 08.00

**Tamil Whats App No: 95004 87059**



## கீழுள்ள ஒவ்வொரு படத்தையும் கவனித்து அதில் சம்பந்தப்பட்ட நபர் யார் என்பதை கண்டுபிடியுங்கள்?

**உதாரணம்:** 

**பதில் : ஆதாம் - ஏவாள்**

**1** 

..........................................................................................

**2** 

..........................................................................................

**3** 

..........................................................................................

**4** 


..........................................................................................

**5** 

..........................................................................................

**6** 

..............................................................................................................................

**7** 

..............................................................................................................................

**8** 

..............................................................................................................................

**9** 

..............................................................................................................................

**10** 

..............................................................................................................................

உங்கள் முகவரி, பங்காளர் எண் மற்றும் தொலைபேசி எண்ணை மறவாமல் எழுதுங்கள். விடைகளைத் தெளிவாகப் புரியும்படி எழுதி இந்தப் பக்கங்களைக் கிழித்து எங்களுக்கு அனுப்பவும்.

..............................................................................................................................

..............................................................................................................................

விடைகள் செப்டம்பர் மாதம் 30ஆம் தேதிக்குள் எங்களிடம் வந்து சேரவேண்டும்.

முகவரி: அன்பரின் ஊழியம், 10–வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி–18.

**உங்களுடைய பதில்களை வினாத்தாளிலேயே எழுதுங்கள். தனிப்பிரதியில் எழுத வேண்டாம். நீங்கள் பதில்களை வைத்து அனுப்பும் கவரை அதிக பசை போட்டு ஒட்டாதீர்கள்.**



# S J SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

**உன் சகோதரன் தரித்திரப்பட்டு, கையிளைத்துப் போனவனானால், அவனை ஆதரிக்க வேண்டும் பரதேசியைப் போலும் தங்கவந்தவனைப் போலும் அவன் உன்னோடே பிழைப்பானாக – லேவி. 25:35**

**... தரித்திரனுக்கு இரங்குகிறவனோ பாக்கியமடைவான் – நீதி. 14:21**

**... தரித்திரனுக்குத் தயை செய்கிறவனோ அவரைக் கனம்பண்ணுகிறான் – நீதி. 14:31**

**கருணைக் கண்ணன் ஆசீர்வதிக்கபடுவான்; அவன் தன் ஆகாரத்தில் தரித்திரனுக்குக் கொடுக்கிறான் – நீதி. 22:9**

**தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான் ... – நீதி. 28:27**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மிக முக்கியமாக நமக்கு சொல்லிக் கொடுப்பது என்னவென்றால், **"உங்களுக்கு உண்டானவை களில் பிச்சை கொடுங்கள்; அப்பொழுது சகலமும் உங்களுக்குச் சுத்தமாயிருக்கும்" (லூக்கா 11:41)** என்பதே. நாம் தேவாலயத்திற்கு போகும்பொழுது ஆலயத்தின் வாசலில் குஷ்டரோகிகள், கைகால் விலங்காதவர்கள், குருடர்கள், கண்பார்வையற்றவர்கள் மற்றும் பலவித அங்கவீனமுள்ளவர்கள் பிச்சை கேட்பார்கள். பல சமயங்களில் ஆலயத்தில் பங்குபெறுகிற மக்கள் அவர்களை பற்றி கவலைப்படுவதில்லை. ஒருசிலர் மாத்திரம் ஏதோ அவர்கள் கையில் இருப்பதை கொடுப்பார்கள். ஆனால், நான் அப்படிப்பட்டவர்களை பார்க்கும்போது மனதுருகி, தேவனே இப்படிப் பட்டவர்களை தாங்குவதற்கு உதவி செய்யும் என்று சொல்லி ஜெபிப்பேன். அதை நிறைவேற்றும் வண்ணமாக தேவன் என்னை உயர்த்தினபோது அவர்கள் வயிறார சாப்பிடுவதற்கு உதவி செய்தேன். இப்போதும் அப்படிப்பட்ட ஏழைகள், வறுமை யினால் வாடுபவர்கள் யாவரையும் போஷித்து, வேத வசனம் சொல்லுகிறபடி அவர்களை ஆதரிக்கும் வண்ணம் நமது SJ Saves Trust-ஐ தொடங்கி செயல்படுத்தி வருகிறோம். ஆம், பிரியமானவர்களே! **இயேசு கிறிஸ்து இப்படிப்பட்ட ஏழைகளுக்கும், தரித்திரருக்கும் நமக்கு உண்டானவைகளில் இருந்து கொடுக்கும்படி** கூறுகிறார்.

**இயேசு அவனைப் (மிகுந்த ஆஸ்தியுள்ள ஒருவன்) பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து: உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும் - மாற்கு 10 : 21**

எளிமையான நிலைமையிலிருந்து முன்னேறி, மிகப்பெரிய பணக்காரனாக மாறிய ஒருவர் இருந்தார். அவர் ஆலயத்திற்கு தவறாமல் செல்வார் என்றாலும் வேத வசனங்களை கைக்கொள்ள மாட்டார். அது எப்படியென்றால், எனக்கு எல்லாம் இருக்கிறது; நான் யாரிடமும் எதற்காகவும் செல்ல தேவையில்லை. என் பிள்ளைகளுக்கும் வரன்களை நான் தேடி செல்ல தேவையில்லை; அநேகர் என் பிள்ளைகளை தேடி வருவார்கள் என்று பெருமை கொண்டவராக இருந்தார். அதுமட்டுமல்லாது, பிச்சைகாரர்கள், ஏழைகள், விதவைகள், ஆதரவற்ற பிள்ளைகள் என்று யாருக்குமே உதவி செய்யமாட்டார். தன் வீட்டில் வேலை செய்யும் வேலைகாரர்களுக்கும் சரியாக சம்பளம் கொடுக்கமாட்டார். சொந்த பந்தங்கள் ஏதாவது அவசரமான காரியத்திற்கு என்று சொல்லி உதவி கேட்டு வந்தாலும் எந்த உதவியும் செய்ய மாட்டார். இப்படிப்பட்ட கருமியாக வாழ்ந்து வந்தார். இதை

அறிந்த யாவரும் அவருடைய உறவினர்களும் அவர் வீட்டிற்கு செல்லமாட்டார்கள்.

பெருமையோடும் செல்வாக்கோடும் மார்த்தட்டி வாழ்ந்து வந்த அவர் திடீரென்று நோய்வாய்ப்பட்டார். எனவே, வெளியூருக்கு சென்று சிகிச்சை எடுத்து வந்தார். அப்பொழுது அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் அவர் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டார் என்று அறிந்து, அதற்குரிய எல்லா சிறப்பு சிகிச்சைகளையும் கொடுத்தனர். ஆனாலும், அவருடைய சரீரத்திலே எந்தவிதமான முன்னேற்றமும் காணப்படவில்லை. இதனால் குழப்பமுற்ற மருத்துவர்கள் அதற்குரிய காரணங்களை கண்டுபிடிக்க வேண்டும் என்று சொல்லி ஆராய்ச்சி மேற்கொண்டனர். அதன் முடிவில் அவருக்கு எந்தவிதமான கெட்டபழக்க வழக்கமும் இல்லை; ஆனால் அவரை கவலைக் குள்ளாக்குகின்ற மனஅழுத்தமே அதற்கு காரணம் என்று கண்டறிந்தனர். இதை கண்டறிந்த மருத்துவர்கள் அவரைப் பார்த்து: உங்கள் மனஅழுத்தமே உங்களுடைய வியாதிக்கு காரணம் என்றனர்.

மருத்துவர்கள் கூறியதை சிந்திக்கலானார். மரணபயமும் அவரை வாட்டியது. என்ன செய்வதென்று அறியாமல் புலம்பி தவித்தார். அதே சமயத்தில் அவருடைய மனைவி பிள்ளைகள் அவருடைய மனந்திரும்புதலுக்காக, ஊக்கமாய் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுதுதான் அவர் தன் தவறுகளை உணர்ந்தார். நான் எவ்வளவு பணம் வைத்திருந்தாலும் அது எனக்கு என்னுடைய இந்த வேதனையின் நேரத்தில் உதவ முடியவில்லையே. நான் பிணியாளிகளில் ஒருவனாக தான் கருதப்படுகிறேன். ஆனால், என் வேலைக்காரனோ பணமின்றி கஷ்டப்பட்டாலும் சந்தோஷமாக தன் குடும்பத்தாருடன் வாழ்கிறான். ஏன் என்னால் முடியவில்லை என்று யோசித்தார். சிந்தித்த அவர், ஐயோ! எத்தனையோ நன்மையான காரியங்கள் இருக்க, பணம் தான் எல்லாம் என்று சொல்லி, அதன்மீது நம்பிக்கை வைத்து வாழ்ந்து விட்டேனே; அதையே நினைத்து நினைத்து, யாருக்கும் உதவாமல் சேர்த்து வைத்து, மரணத்தின் விளிம்பிற்கு வந்துவிட்டேனே என்று கலங்கினார். தன்னுடைய பிசினித்தனமான வாழ்வையும் செயல்களையும் எண்ணி மனம் வருந்தினார். அந்நேரமே, தேவனிடத்தில் மன்னிப்புக் கேட்டார். அவருடைய மனம் இலகுவானது. மனஅழுத்தம் நீங்கியது. ஆத்துமா குணமடைந்தது. ஆத்துமா குணமடைய குணமடைய அவரது சரீரத்திலும் முன்னேற்றம் காணப்பட்டது. பூரண சுகமடைந்த வராய் வீடு திரும்பினார்.

வீடு திரும்பிய அவர் பணத்தையே தன் நம்பிக்கையாக கொண்டு வாழாமல், கர்த்தரை தன் நம்பிக்கையாக கொண்டு வாழ ஆரம்பித்தார். அதுமட்டுமல்ல, தன் வேலைக்காரருக்கு வெகுமதிகளை வாங்கி கொடுத்தார். யார் யாரை உதாசீனப்படுத்தினாரோ அவர்களிடம் மன்னிப்பு கேட்டார். தன்னால் கஷ்டத்தை அடைந்தவர்களுக்கு உதவி செய்தார். அதுமட்டுமல்ல, தன்னிடம் உதவி கேட்டு வந்தவர்களுக்கு முகம் கோணாமல் கொடுத்து உதவினார். அதனால், அவரும் அவருடைய பிள்ளைகளும் சந்தோஷமாய் வாழ்ந்தனர். தேவனுடைய சித்தத்தின்படி அவருடைய மகள்களுக்கு நல்ல மணமகன்கள் கிடைத்தனர். தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.

*ஆம், பிரியமானவர்களே! அவருடைய பணப் பெருமை அவரை காப்பாற்ற முடியவில்லை. பணம் எல்லாவற்றிற்கும் உதவும் என்றும்; பண ஆசையே எல்லா தீமைக்கும் காரணமாயிருக்கிறது என்றும் வேதம் கூறுகிறது. அதுமாத்திரமல்ல,* **ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான் (நீதி.19:17)** *என்று பார்க்கிறோம். ஆகையினால் தான் நாங்களும் உங்களோடு இணைந்து, மாதா மாதம் ஏழைகள், திக்கற்றவர்கள், ஆதரவற்ற நிலைமையில் உள்ளவர்களுக்கு நமது அறக்கட்டளை மூலமாக உதவி செய்கிறோம்.*

*கடந்த மாதத்திலும் நூற்றுக்கணக்கான ஏழை மாணவர்கள் மற்றும் வயோதிபர்களுக்கு சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டத்திலுள்ள கிராமங்களில் உதவிகள் செய்துள்ளோம். குறிப்பாக சுசிலா என்னும் மூதாட்டி வீடில்லாமல் இருந்தார்கள். அவர்களுக்கு சிறிய அளவில் நல்ல முறையில் வீடு கட்டி கொடுத்துள்ளோம். நமது* Day care centre-*ல் படிக்கும் அனைத்து பிள்ளைகளுக்கும் தேவையான விட்டமின் மாத்திரைகள், புரோட்டின் பவுடர் மற்றும் காப் சிரப் போன்றவைகள் கொடுக்கப்பட்டது. அனுதினமும் இரவு உணவும் பிள்ளைகளுக்கு*

தருகின்றோம். பிள்ளைகள் அனைவரும் இந்த கொரோனா தாக்கம் அதிகமான கால நேரத்திலும் தேவனால் பூரணமாக பாதுகாக்கப்பட்டுள்ளனர். அதை நினைக்கும்பொழுது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது.

ஆகஸ்ட் மாதத்திலிருந்து நமது ட்யூசன் மையங்களில் படிக்கின்ற நூற்றுக்கணக்கான மாணவர்களின் நலன் கருதி பல ஆசிரியர்களை கொண்டு ட்யூசன் வகுப்புகள் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்துவிட்டோம். இதற்கு மாதத்திற்கு மொத்தம் **Rs.10,00,000/-** செலவாகும். தொடர்ந்து இப்பணிகளுக்கு உதவுங்கள். இம்மட்டும் எங்களோடு துணை நின்று உதவுகின்ற உங்களுக்கு எங்களது நன்றிகளை தெரிவிக்கிறோம்.

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act–ன்படி Sec. 80G Exemption உண்டு**

# Employment Opportunity

## வேலை வாய்ப்புகள்

1) ***Accountant***
   ***B.Com., / M.Com., Graduates***
   *Skills Required : Tally ERP 9* பயன்படுத்த தெரிந்தவர்கள்
2) ***Prayer warriors :*** *Qualification +2/Any degree Born again Christian only*
3) ***Camera men with adequate experience***
   முன் அனுபவமுள்ள கேமராமேன்கள் தேவை
4) ***Video Editors*** தேவை
5) ***Drivers***
6) ***Cooks***
7) ***House keepers***

**தகுந்த ஊதியம் கொடுக்கப்படும்**

***Apply to : info@mojindia.org***

**கிறிஸ்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்**

# சேலம் மாவட்டம், கருமாபுரம், தெற்கு காடு, பத்தாங்கல் மேடு ஆகிய கிராமங்களில் செய்யப்பட்ட உதவி பணிகள்














# S J SAVES TRUST

## கிராமப்புற மருத்துவமனை பணிகள்

> சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்ததைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்.
>
> - ஏசாயா 61:3

*அன்பான மருத்துவமனை பங்காளர்களே!*

கர்த்தருடைய கிருபையால் நமது கிராமப்புற மருத்துவ சேவை மையம் நாளுக்குநாள் வளர்வதற்காக, வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறோம். இருப்பினும் பங்காளர்களாகிய நீங்கள் இதற்காக ஜெபியுங்கள். மருத்துவமனை அமைந்துள்ள பகுதியின் 50மைல்கள் சுற்றளவில் எந்த விதமான கிராமப்புற மருத்துவமனை இதுபோன்ற வசதிகளுடன் இல்லாதபடியால் மக்கள் நமது மருத்துவமனையை நாடிவருகிறார்கள். மேலும் இப்பகுதியிலுள்ள தினக் கூலி வேலை செய்பவர்கள், வயதானவர்கள். அரசு கிராமப்புற மருத்துவ சேவை மையத்தையே நம்பி இருக்கின்றனர். அதிலும் அங்கே பிரசவத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறபடியால் பொது மருத்துவத்திற்கு நம்மையே நாடி வருகின்றனர். நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கிற படியால் தொடர்ந்து இந்த அறப்பணியை செய்ய தேவனால் தூண்டப்படுகிறோம். இதன் வளர்ச்சிக்காகதேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள்.

நாம் மருத்துவமனையை சற்று நவநாகரீகமாக மேம்படுத்தவேண்டும். இதற்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறோம். நீங்களும் ஜெபியுங்கள்! உடனடியாக எலும்பு முறிவுதுறைக்கு ஒரு சிறிய அறுவை சிகிச்சை அரங்கம், ஒரு மினி தியேட்டர் மற்றும் அல்ட்ராசவுண்டு ஸ்கேன் வாங்கவேண்டும். இதற்கான செலவு **Rs. 50,00,000/- lakhs** வரை ஆகும். உங்களில் ஒரு சிலரை கர்த்தர் ஏவினால் தாங்குங்கள். உதவி செய்பவர்கள் உங்கள் தாராளமான காணிக்கைகளை அனுப்புங்கள். **வருகின்ற நோயாளிகளுடைய காயங்கள் கட்டப்படும்பொழுது நீங்கள் நல்ல சமாரியனாக தேவனால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.** இப்பணிகளுக்கு கொடுக்கும் காணிக்கைகளுக்கு அரசாங்கத்தின் முழு வரிவிலக்கு உண்டு. கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!





# உலகச் செய்திகள்

★ உலக அளவில் கிறிஸ்தவர்கள் அதிகமாக துன்புறுத்தப்படுகின்ற நாடுகளின் பட்டியலில் ஆப்கானிஸ்தான் இரண்டாவது இடத்தில் இருக்கிறது.

★ ஆப்கானிஸ்தானில் உள்ள மொத்த கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை இருபதாயிரம் அல்லது அதற்கு கீழே தான் இருக்கும். அவர்களுக்கு என்று Open church எதுவும் கிடையாது. இரகசியமாக வீடுகளில் கூடியே கர்த்தரை ஆராதிக்க முடியும். தற்பொழுது அதற்கும் வழியில்லாதபடி ஆகிவிட்டது.

★ கிறிஸ்தவர்களின் உயிருக்கு அங்கு எப்படி உத்தரவாதம் இல்லையோ, அதேப் போல அவர்களுடைய வீடு மற்றும் சொத்துக் களையும் அபகரித்துக் கொள்ளும் நிலை உருவாகி வருகிறது.

★ வீடு வீடாக நுழைந்து, கிறிஸ்தவர்களை தேடும் பணியில் இறங்கியுள்ளார்கள்.

★ பஸ், ரயிலில் பயணம் செய்கிற கிறிஸ்தவர்கள் தங்களுடைய செல்போனில் Bible App வைத்திருப்பதை உடன் பயணம் செய்கிறவர்கள் கண்டுபிடித்து விட்டால், விரைவில் தகவல் தெரிவிக்கப்பட்டு உடனடியாக அந்த கிறிஸ்தவரை பிடித்து விடுகிறார்கள்.

★ கிறிஸ்தவர்களின் Phone, e.mail, Face Book அனைத்தின் வழியாக அவர்களையும் மற்றும் அவர்களோடு தொடர்பு உடையவர்களையும் தேடுகிறார்கள்.

★ தற்பொழுது Face Book நிறுவனம் ஆப் உள்ள பொது மக்களின் Face Book தொடர்புகளை மற்றயாரும் (friends list) அறியாதபடி முழுவதும் துண்டித்து விட்டது.

★ அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் உயிரை துச்சமாக நினைத்து கிறிஸ்துவுக்காக மரிக்கவும் தயாராயிருக்கிறார்கள்.

★ ஆப்கானிஸ்தானில் உள்ள கிறிஸ்தவ ஊழியர்கள் உருக்கமாக கூறிய செய்தி என்னவென்றால், **"அதிகபட்சமாக 15 நாட்கள் தான். நிச்சயம் எங்களை கொலை செய்து விடுவார்கள். நாங்கள் இயேசு கிறிஸ்துவை முகமுகமாய் தரிசிக்க ஆயத்தமாய் உள்ளோம்."**

Souce : www.Spectator.co.uk
www.indcatholicnews.com
மற்றும் பலசெய்தி இணையதளங்கள்

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2019-2021 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month



Web Series - Tamil

# பரிசுத்தம்

- DR.ஜேன் ஜாஷ்வா

இந்த வலைத்தொடரை DR.ஜேன் ஜாஷ்வா அவர்களின் Youtube சேனலில் கண்டுமகிழுங்கள்

https://www.youtube.com/c/DrJaneJoshua

## சிறப்பு ஜெபம்

DR.ஜேன் ஜாஷ்வா அவர்களின் சிறப்பு ஜெபங்களை அவர்களது Youtube சேனல் மற்றும் Ministrty of Jesus Website-ல் கண்டு தேவனின் ஆசிர்வாதத்தை பெறுங்கள்.

YouTube Dr. Jane Joshua

https://ministryofjesus.in




DR.ஜேன் ஜாஷ்வா

Call Us:
+91 94888 45627

## தனி ஜெபம் மற்றும் ஆலோசனை

Dr. ஆனந்த ஸ்திரா மற்றும் அவர்கள் குடும்பத்தினரை சந்தித்து ஜெபிக்க விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட அலைபேசியில் முன் அனுமதி பெற்று வருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செல் : 80987 42638 & 94888 45627

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்:7 இதழ்:9 செப்டம்பர் 2021 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL: 7 ISSUE NO : 9 September 2021 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-



# நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது

சங்கீதம் 119:71